# O.S. No. 488 / 2021

# 14.10.2022

**வ.த.சா.1, திரு. P. ஜோதி, க/பெ. பார்த்திபன்**

**சாட்சி**

**முதல் விசாரணை**

நான் கிழக்கு முகப்பேரில் குடியிருந்து வருகிறேன். நான் இந்த தாவா வழக்கில் முதல் வாதியாவேன். நான் வாதித்தரப்பு சாட்சி 1. எனது சாட்சியத்தை நான் நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். என் தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. 01.03.1995 தேதியிட்ட கிரைய ஆவணம் (ஆவண எண் 748/1995) வ.த.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. 14.12.2020 தேதியிட்ட செட்டில்மென்ட் ஆவணம் (ஆவண எண் 5077/2022) வ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. 2018-2019 வருடத்திற்கான சொத்து வரி அறிவிப்பு வ.த.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. குடிநீர் மற்றும் கழிவுநீர் வடிக்கால் வாரியத்தின் இரசீது வ.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. எனது பெயரில் உள்ள தமிழ்நாடு மின்சார வாரியத்தில் வழங்கப்பட்ட மின் அட்டையின் நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு சரியாக இருந்ததன் பேரில் அசல் சாட்சியின் வசம் ஒப்படைக்கப்படுகிறது) வ.த.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. எனது ஆதார் அடையாள அட்டையின் நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு சரியாக இருந்ததன் பேரில் அசல் சாட்சி வசம் ஒப்படைக்கப்படுகிறது) வ.த.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. 23.06.2021 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் வ.த.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8. 26.06.2021 தேதியிட்ட அஞ்சல் ஒப்புகை அட்டைகள் (வரிசை 3) வ.த.சா.ஆ. 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9. 08.08.2021 தேதியிட்ட முகப்பேர் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்ட புகாரின் நகல் வ.த.சா.ஆ. 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**தாவாப்படி தீர்ப்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.**

**(பிரதிவாதித் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)**